[2023 ஜனவரி 10

(ஆ) திரு. இ. திருமகன் ஈவெரா, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு ஈரோடு (கிழக்கு) தொகுதியிலிருந்து பதினாறாவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றிய திரு. இ. திருமகன் ஈவெரா அவர்கள் 4-1-2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

பாரம்பரியமிக்க அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த திரு. இ. திருமகன் ஈவெரா அவர்கள் அனைவரிடத்திலும் அன்போடு பழகக்கூடிய இனிய பண்பும், இன்முகத்தோடு பணியாற்றுகின்ற எளிமையும் கொண்டவர். கட்சிப் பாகுபாடின்றி பாசமோடு பழகக்கூடிய பாங்காலும், தொகுதி மக்களுக்கு தொண்டு செய்வதில் காட்டிய அக்கறையினாலும் அனைத்துத் தரப்பினரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (11-1-2023), புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

— — — — —